தினமணி

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 75.90 அடி**

First Published : 08 Mar 2011 09:55:40 AM IST

ஈரோடு, மார்ச் 7: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 75.90 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 262 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 13.61 டிஎம்சி.

**நெல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள் தயாரிப்பு பயிற்சி**

First Published : 08 Mar 2011 09:36:01 AM IST

கோவை, மார்ச் 7: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் "நெல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்தல்' தொடர்பான இரண்டு நாள் பயிற்சி, மார்ச் 15-ம் தேதி தொடங்குகிறது.

இந்தப் பயிற்சியில், நெல்லி கலவை பானங்கள், சர்க்கரைப் பாகு, மிட்டாய் மற்றும் துருவல், தயாரித்த பொருள்களை சுகாதார முறையில் அடைத்தல், தொழில் தொடங்குவதற்கான உரிமம், பொருள்களை விற்பனை செய்வதற்கான வங்கி கடன் வசதி பெறுதல் மற்றும் விற்பனை செய்யும் யுக்திகள் குறித்து கற்றுத் தரப்படும்.

பயிற்சி பெற விருப்பம் உள்ளவர்கள், ரூ.1,000 கட்டணம் செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயரை பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சி கட்டணத் தொகையை வங்கி வரைவோலை மூலம் "முதல்வர், வேளாண் பொறியியல் கல்லூரி (ஈஉஅச,

அஎதஐஇமகபமதஅக உசஎஐசஉஉதஐசஎ)' என்ற பெயரில், கோவையில் உள்ள ஸ்டேட் வங்கியில் பெறத்தக்க வகையில் எடுக்க வேண்டும். இந்த வரைவோலையை பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை - 641003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மார்ச் 14-ம் தேதிக்குள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 0422-6611340, 6611268 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி முகாம்**

First Published : 08 Mar 2011 09:54:10 AM IST

உதகை, மார்ச் 7: நீலகிரி மாவட்டத்தில் நீர்வளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக தோட்டக்கலைத் துறை சார்பில் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

மத்திய மண், நீர்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்காக, மண் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாப்பதற்கான தோட்டக்கலைத் துறை தொழில்நுட்பங்கள் என்ற பயிற்சி வரும் 8-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை நடைபெறுகிறது.

உதகை சேரிங்கிராஸ் பகுதியில் உள்ள தோட்டக்கலை பயிற்சி மையத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி வகுப்புகளில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக பயிற்சி விஞ்ஞானிகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தொழில்நுட்பப் பேராசிரியர்கள் பங்கேற்று, பல்வேறு தலைப்புகளில் பேசுகின்றனர்.

தோட்டக்கலைத் துறை பணிகள் மற்றும் மண், நீர்வளப் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் தொடர்பாக மத்திய, மாநில அரசின் ஆராய்ச்சிப் பண்ணைகளில் செயல்விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சி முகாமை, மார்ச் 8-ம் தேதி காலை 10 மணிக்கு, தமிழ்நாடு தொலைதூரக் கல்வி மைய இயக்குநர் வள்ளுவ பாரிதாசன் துவக்கி வைக்கிறார்.

மத்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத் தலைவர் கோலா தலைமை வகிக்கிறார்.

தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஹால்துரை, உதவி இயக்குநர் ஜெகதீஸ்வரன் பேசுகின்றனர். பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளை பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் மணிவண்ணன் தலைமையிலான குழுவினர் செய்துள்ளனர்.

**தஞ்சை மாவட்டத்தில் கோடை சாகுபடி தொடக்கம்**

First Published : 08 Mar 2011 02:01:53 PM IST

தஞ்சாவூர், மார்ச் 7: தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடை சாகுபடி பணிகள் பரவலாகத் தொடங்கியுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1.22 லட்சம் ஹெக்டேரில் சம்பா சாகுபடியும், 18 ஆயிரம் ஹெக்டேரில் தாளடி சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டது. இதில் 89,815 ஹெக்டேரில் சம்பா அறுவடைப் பணிகளும், தாளடியில் 9,390 ஹெக்டேரில் அறுவடைப் பணிகளும் இதுவரை முடிந்துள்ளன.

ஒரு ஹெக்டேரில் சராசரியாக 5,426 கிலோ மகசூலும், ராஜராஜன் முறையில் ஹெக்டேருக்கு 7,250 கிலோ மகசூலும் கிடைத்துள்ளதாக வேளாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், அறுவடை முடிந்த வயல்களில் கோடை சாகுபடி பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 21,432 ஹெக்டேரில் உளுந்தும், 2,806 ஹெக்டேரில் பயறு வகைகளும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. வழக்கமாக கோடை சாகுபடியாக 20,000 ஹெக்டேரில் நெல் சாகுபடி நடைபெறும். அதிலும், இப்போது இதுவரை 5,000 ஹெக்டேரில் நெல் சாகுபடி தொடங்கிவிட்டது.

ஆழ்குழாய் கிணற்றிலிருந்து, மின் மோட்டார் மூலம் நீர் இறைத்து கோடை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த வாரங்களில் மின் விநியோகத்தில் ஏற்பட்ட தடையால் பெரும்பாலான இடங்களில் கோடை பயிர்கள் நீரின்றி கருகும் நிலை ஏற்பட்டது. இதனால், வேதனையடைந்த விவசாயிகள் சீரான மின் விநியோகம் கேட்டு போராட்டம் நடத்தினர். அதிகாரிகள் அளித்த உறுதியை அடுத்து, இப்போது மின் விநியோகம் ஓரளவிற்கு சீராகியுள்ளது.

மின் விநியோகம் தடையின்றி கிடைக்கும்பட்சத்தில், கோடை சாகுபடியிலும் திருப்திகரமான மகசூல் பெறலாம் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

**கல்லூரி மாணவர்களுக்கு மீன் வளர்ப்புப் பயிற்சி**

First Published : 08 Mar 2011 02:35:45 PM IST

காரைக்கால், மார்ச் 7: காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மீன் வளர்ப்பு மற்றும் மதிப்பூட்டப்பட்ட மீன் பொருள்கள் தயாரித்தல் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

காரைக்கால் அண்ணா அரசு கலைக் கல்லூரி விலங்கியல் துறை மூன்றாமாண்டு மாணவ, மாணவிகளுக்கு இப் பயிற்சி அளிக்கப்பட்டது. குறிப்பாக, கெண்டை மீன் குஞ்சு உற்பத்தி முறை, இம் மீனை வளர்க்கும் முறை, நன்னீர் இறால், கொடுவா மீன் மற்றும் கல் நண்டு வளர்ப்பு முறைகள் குறித்து விளக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, மதிப்பூட்டப்பட்ட மீன் பொருள்கள் தயாரிப்பு குறித்த நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

தினமலர்

**பருத்தியில் மாவுப்பூச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,00:00 IST

பருத்தி சாகுபடியாளர்களின் கவனத்திற்கு, உங்கள் பருத்தியில் எறும்பு நடமாட்டம் உள்ளதா? நுனிக்கிளைகள் கொத்தாக உள்ளனவா? வெயில் நேரத்தில் இலைகள் பளபளப்பாக மின்னுகின்றனவா? பஞ்சுபோல் அடை, அடையாக நுனிக்குருத்து இலைகள், காய்களில் ஒட்டிக் கொண்டிருக்கின்றனவா? அப்படியென்றால் உங்கள் பருத்திப்பயிரில் மாவுப்பூச்சி தாக்குதல் உள்ளது என தெரிந்துகொள்ளலாம்.

**மாவுப்பூச்சி தாக்குதல்:** பொதுவாக மாவுப்பூச்சி தாக்குதல் துவக்கத்தில் இங்கும் அங்குமாக ஒரு சில செடிகளில் மட்டுமே காணப்படும். நுனிக்குருத்து, இலைகள், காய்கள் ஆகியவற்றில் இப்பூச்சி தோன்றி சாற்றை உறிஞ்சும். இதனால் தாக்கப்பட்ட செடிகள் மஞ்சள் நிறமாக மாறி, வாடி காய்ந்துவிடும். சில சமயங்களில் இலைகள் காய்கள் உதிர்ந்துவிடும். இப்பூச்சி கூட்டம் கூட்டமாக பஞ்சுபோல் அடையாக இலை மற்றும் தண்டுகளில் ஒட்டிக்கொண்டிருக்கும்.

**பரவும் விதம்:** மாவுப்பூச்சிகள் வெளியேற்றும் தேன் போன்ற துளிகள் இலைகளில் படிந்து பளபளவென்று மின்னுகின்றன. இத்தேன் போன்ற துளிகளை குடிக்க வருகின்ற எறும்புகள் மாவுப்பூச்சியின் குஞ்சுகளை அடுத்த செடிகளுக்கு எடுத்துச்சென்று பரப்பிவிடுகின்றன. அருகில் அறுவடை முடிந்தபின்னரும் அகற்றப்படாத கத்தரி, பருத்தி, வெண்டை செடிகள் இருப்பின் அவற்றில் மாவுப்பூச்சிகள் பெருகி, காற்று மற்றும் மனித நடமாட்டம் மூலம் அருகிலுள்ள புதிய பயிர்களுக்குப் பரவுகின்றன.

**தாக்கப்படும் பிற பயிர்கள்:** பருத்தியைத்தவிர வெண்டை, புடலை, கோவை, செம்பருத்தி, புகையிலை, வாழை, கொய்யா, சீத்தாப்பழம் போன்ற பயிர்களிலும் குரோட்டன்ஸ், நாயுருவி போன்ற செடிகளிலும் காணப்படுகின்றது.

**கட்டுப்படுத்த...:** வயலைச் சுற்றிலும் நன்கு உயரமாக வளரக்கூடிய சோளப் பயிரினை

நெருக்கமாக வேலி போல் பயிரிட்டால் அரண் போல் இருந்து காற்று மூலம் பரவும் மாவுப்பூச்சிகள் வயலினுள் வருவது தடுக்கப்படும். மக்காச்சோளம், தட்டைபயறு போன்றவற்றினை வாய்க்கால் வரப்புகளில் ஆங்காங்கே பயிரிட்டால் முறையே கிரைசோபா, பொரிவண்டு போன்ற நன்மை தரும் பூச்சிகள் பெருகி மாவுப்பூச்சிகளின் பல்வேறு பருவங்களைக் கட்டுப்படுத்துகின்றன. காற்று மூலம் பரவும் மாவுப்பூச்சிகளை கண்காணிக்க நெடுஞ்சாலை மஞ்சள் நிறம் பூசப்பட்ட டப்பாக்களில் விளக்கெண்ணெய் தடவி ஏக்கருக்கு ஐந்து என்ற அளவில் இரண்டடி உயரக் குச்சிகளில் கவிழ்த்து வைக்க வேண்டும்.
பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட அதிகமாக தழைச்சத்து உரங்களை இடுவது தவிர்க்கப்பட வேண்டும். இதனைக் கட்டுப்படுத்த மீதைல் பாரத்தியான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று மில்லி வீதம் அல்லது குளோர்பைரிபாஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஐந்து மில்லி வீதம் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும். மருந்துக்கரைசல் பயிரின் பாகங்கள் மற்றும் மாவுப்பூச்சியின் மீதுள்ள மாவு போன்ற படலத்தினுள் நன்கு பரவிப் படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளான சாண்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால், தனுவெட் போன்றவற்றுள் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். 10-15 நாட்கள் கழித்து மீண்டும் மருந்து தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க பயிரின் வளர்ச்சியினைப் பொருத்து ஏக்கருக்கு 200 முதல் 400 லிட்டர் வரை மருந்துக்கரைசல் தேவைப்படும்.ந.முருகேசன், பேராசிரியர் மற்றும் தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

**தரிசுநிலத்தில் புளி சாகுபடி**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,00:00 IST



தமிழக அரசு தரிசுநில மேம்பாட்டிற்கு நல்லதிட்டங்களை வகுத்திருக்கிறது. விளையாத தரிசு நிலங்களில் வளத்திற்கேற்ப திட்டங்களை நிறைவேற்ற பலரும் முன்வர வேண்டும். இதன்மூலம்தான் விவசாயம் ஒரு வளமான உயர் தொழில் என்று நாடே உணரும்.

**ரகங்கள்:** பிகேஎம்1, உரிகம், தும்கூர் மற்றும் ஹாசனூர் **மண் மற்றும் தட்பவெப்பநிலை:** மணல் கலந்த மண் இதன் வளர்ச்சிக்கு மிகவும் உகந்தது. வெப்பம் மற்றும் வறட்சியைத் தாங்கி வளரும். சராசரி மழை அளவு வருடத்திற்கு 500 முதல் 1500 செ.மீ. வரை போதுமானது. மானாவாரியாகப் பயிர் செய்ய ஏற்ற பயிர் ஆகும்.

**பருவம்:** ஜூன் - டிசம்பர் இனப்பெருக்கம்: விதை, ஒட்டுக்கட்டிய செடிகள் மற்றும் மொட்டுக்கட்டுதல்

**இடைவெளி:** 8-10 து 8-10 மீ.

**நடவு:** 1 மீட்டர் நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகள் எடுக்க வேண்டும். குழிகளில் மேல் மண்ணோடு தொழு உரத்தைக் கலந்து குழிகளில் மத்தியில் செடிகளை நடவேண்டும். ஒவ்வொரு குழிக்கும் 1.3 சதவீதம் லிண்டேன் மருந்து 50 கிராம் தூவ வேண்டும். செடிகளை நட்டவுடன் கன்றுகளைக் காற்றிலிருந்து பாதுகாக்க குச்சிகளை ஊன்றி கட்டிவிட வேண்டும்.

**நீர்ப்பாசனம்:** கன்றுகள் நன்கு துளிர்த்து வளரும் வரை நீர் பாய்ச்ச வேண்டும்.

**அறுவடை:** நான்காவது வருடத்திலிருந்து காய்க்க ஆரம்பித்தாலும் ஒன்பதாவது வருடத்தில்தான் நல்ல மகசூல் கிடைக்கும். பழங்களை ஒவ்வொரு வருடத்திலும் ஏப்ரல்-மே மாதங்களில் அறுவடை செய்யலாம்.

**மகசூல்:** ஒரு வருடத்திற்கு ஒரு மரத்திலிருந்து 150-200 கிலோ. இதன் அடிப்படையில் தரிசு நிலத்தில் புளி சாகுபடி ஒரு லாபகரமான தொழிலாகும்.தொடர்புக்கு: எம்.அகமது கபீர், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், எல்லீஸ் நகர் போஸ்ட், தாராபுரம்-638 657.-எம்.அகமது கபீர்,வேளாண்மை ஆலோசகர்,அக்ரி கிளினிக், தாராபுரம். 93607 48542.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,00:00 IST

தமிழக உழவர்கள் பல கண்டுபிடிப்புகளை வெளியிட்டு பயனடைந்துள்ளனர்.
**மாற்றியமைக்கப்பட்ட கோனோ களைக்கருவி:** ராஜராஜன் 1000 சாகுபடியில் பயன்படுத்தப்படும் கோனோவீடரில் உள்ள பிரச்னைகளை களைய மாவட்ட வேளாண்மை அறிவியல் மையத்தின் உதவியோடு சில மாற்றங்களைச் செய்துள்ளார். முதலில் களைக் கருவியிலுள்ள கூம்புவடிவ உருளையை மாற்றிவிட்டு பல்வடிவ அச்சினைப் பொருத்தியுள்ளார். சேற்றின் தன்மைக்கேற்ப பட்டையின் உயரத்தினை மாற்றியமைக்க அச்சாணி ஒன்றினைப் பொருத்தியுள்ளார். களைக்கருவியின் முன்பக்கத்தில் நேர்வழியில் மண்ணின் மேற்பரப்பில் உள்ள சேற்றினை ஏற்றிச்செல்லாத வகையில் பட்டையினை அமைத்துள்ளார். இதை எளிதாக பயன்படுத்துவதால் உடல்வலி ஏற்படுவதில்லை. இதன் விலை ரூ.500. எடை 2.5 கிலோதான். இந்த கருவியை மாற்றி அமைத்தவர் **துரை (எ) ஜெ.கோவிந்தன், சிறுவாய்வீடு அஞ்சல், வானூர் தாலுகா, விழுப்புரம் மாவட்டம்.**

**சவுக்கு கட்டை அகற்றும் உழவுக்கருவி:** சவுக்கு சாகுபடியில் அறுவடைக்குப்பின் அடிமரங்களை அகற்றுவது மிக சிரமமான வேலை. எனவே விவசாயி ஒரு பொறியாளர் துணையுடன் ஒரு ஆழ உழும் கருவியை வடிவமைத்துள்ளார். இப்பண்ணைக் கருவி டிராக்டர் மூலம் உழுவதற்கு உகந்தது. ஆனால் வேர்க்கட்டைகளை அகற்றும் திறன் குறைவாக இருந்தது. எனவே இப்பண்ணைக் கருவியின் மேல் புறத்தில் 8 அடி நீளமுள்ள ஒரு இரும்பு உருளையை இணைத்து சவுக்கு கட்டையை அகற்றும் கருவியை உருவாக்கியுள்ளார். இக்கருவி 410 கிலோ எடை உள்ளது. ஒரு ஏக்கரில் 60 ஆட்கள் செய்யக்கூடிய வேலையை எளிதில் செய்யும் தன்மையுடையது. எவ்வகை மண்ணிலும் இக்கருவி தடையின்றி இயங்க வல்லது. இக்கருவியை வடிவமைத்த விவசாயி தி.கோதண்டம், சேமங்கலம் கிராமம், வானூர் தாலுகா, விழுப்புரம் மாவட்டம். 90035 93336. (தகவல்: ந.சாத்தையா, பா.கலைச்செல்வன், தி.மனோகரன், வேளாண் அறிவியல் நிலையம், திண்டிவனம் விரிவாக்க கல்வி இயக்ககம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003)
-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**கரும்பு அறுவடை தாமதப்படுத்தும் சாக்கரை ஆலை நிர்வாகம் கவலையில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,01:45 IST

பாபநாசம்: கரும்பு அறுவடையை சர்க்கரை ஆலை நிர்வாகம் தாமதப்படுத்துவதால் கரும்பு விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் கரும்பு விவசாயிகள் கவலையில் உள்ளனர். தஞ்சை மாவட்டம் திருமண்டங்குடி பகுதியில் திருஆருரான் சாக்கரை ஆலை உள்ளது. இப்பகுதியில் உள்ள அனைத்து கரும்புகளும் இந்த ஆலையில் பதிவு செய்யப்பட்டு அறுவடை செய்வது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாகவே இந்த சாக்கரை ஆலைக்கு உட்பட்ட விவசாயிகள் பல வகையிலும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். இதற்கு முக்கிய காரணமாக சாக்கரை ஆலை நிர்வாகத்தின் அலட்சிய போக்கு என விவசாயிகள் கருதுகின்றனர்.

நெல் விவசாயம் செய்யும் விவசாயிகளை கரும்பு பயிர் செய்யும்படியும், அதற்கான செலவு, கடன், உள்ளிட்டவைகளை சாக்கரை ஆலை நிர்வாகம் செய்து தருவதாக கூறினர். விதை, உரம் போன்ற சலுகைகளை வழங்குவதாக கூறி விவசாயிகளை கரும்பு பயிரிடும்படி ஆசை வார்த்தைகளை கூறி நெல் விவசாயத்தில் இருந்து திசை திருப்பி கரும்பு பயிரிட ஊக்குவித்தனர். ஆனால், இவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி விவசாயிகள் ஆண்டுதோறும் நஷ்டத்தை தான் சந்தித்து வருகின்றனர். உரிய காலத்தில் அறுவடை செய்ய ஆலை நிர்வாகம் முன் வருவதில்லை. ஆள் பற்றாக்குறை எனக் கூறி 11 மாதத்தில் அறுவடை செய்ய வேண்டிய கரும்பை 15 மாதம் வரை அறுவடை செய்யாமல் இழுத்துடிப்பு செய்து கரும்பை உரிய நேரத்தில் அறுவடை செய்யாமல் பருவம் மாறி அறுவடை செய்வதால் எடை குறையும் நிலை ஏற்படுத்துகின்றனர். இது விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

கரும்பு பயிரிடும் காலத்தில் சாக்கரை ஆலை நிர்வாகம் 10 மாதத்துக்குள் நிர்வாகமே அறுவடைக்கு கூலி ஆட்களை வைத்து அறுவடை செய்வோம் என கூறித்தான் கரும்பு விவசாயத்தை செய்யும்படி விவசாயிகளை வற்புறுத்துகின்றனர். ஆனால், அறுவடை காலத்தில் உரிய பருவத்தில் அறுவடை செய்ய சாக்கரை ஆலை நிர்வாகம் எவ்வித முயற்சியும் எடுப்பதில்லை. மாறாக பதிவு செய்யப்படாத கரும்புகளை சாக்கரை ஆலை நிர்வாகம் கூலி ஆட்களை வைத்து அறுவடை செய்து வெளி ஊர்களில் இருந்து சாக்கரை ஆலைக்கு அறவைக்கு கொண்டு வருகின்றனர். ஆனால், உள்ளூரில் பதிவு செய்யப்பட்ட கரும்புகளுக்கு ஆள் பற்றாக்குறை காரணம் காட்டி அறுவடையை தள்ளிப் போடுகின்றனர். இதனால், கரும்பு பயிரிடும் விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி பெரும் நஷ்டத்தை சந்திக்கின்றனர்.

கரும்பு விவசாயிகள் பல போராட்டங்களை சாக்கரை ஆலை நிர்வாகத்துக்கு எதிராக நடத்தியும் ஆலை நிர்வாகம் அவ்வப்போது, ""பிரச்னை சரி செய்யப்படும்,'' என உத்திரவாதம் கொடுத்து விட்டு பின்பு மீண்டும் கரும்பு விவசாயிகளை மறந்து விடுகின்றனர். கரும்பு அறுவடை செய்து

அதற்கு உண்டான தொகையை தாமதமாக விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் வழங்குவதாலும் விவசாயிகள் பாதிப்படைகின்றனர். இதில், இன்னொரு வேடிக்கையாக கரும்பு உரிய காலத்தில் அறுவடை செய்ய கட்டிங் ஆர்டர் கொடுக்க சாக்கரை ஆலை அலுவலர்களுக்கு விவசாயிகள் கமிஷன் கொடுக்க வேண்டிய அவல நிலையும் தொடர்கிறது. இதை அரசு உடன் தலையீட்டு கரும்பு விவசாயிகளை நஷ்டத்தில் இருந்து காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என கரும்பு விவசாயிகளின் எதிர்பார்க்கின்றனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,00:29 IST

சிதம்பரம்:அண்ணாமலைப் பல்கலைக் கழக என்.எஸ்.எஸ்., மற்றும் சிதம்பரம் கோவில் நகர ரோட்டரி சங்கம் சார்பில் இலவச கால் நடை மருத்துவ முகாம் வண்டுராயன்பட்டில் நடந்தது.சங்கத் தலைவர் டாக்டர் லிங்க கணேசன் தலைமை தாங்கினார். கால்நடை மருத்துவர்கள் ஜான்கிறிஸ்டி, ஞானசேகரன் குழுவினர் சிகிச்சையளித்தனர். 350க்கும் மேற்பட்ட ஆடு, மாடு, கோழி, நாய் உள்ளிட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை அண்ணாமலைப் பல்கலைக்கழக என்.எஸ்.எஸ்., அலுவலர்கள் திருஞானசம்மந்தம், கலைச்செல்வன், முல்லை உள்ளிட்ட விழாக் குழுவினர் செய்திருந்தனர்.

**பாதிரிக்குப்பத்தில்தென்னங்கன்றுவழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,00:27 IST

கடலூர்:கடலூர் பாதிரிக்குப்பம் ஊராட்சி சார்பில் வீட்டிற்கு வீடு தென்னங்கன்று வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.ஊராட்சித் தலைவர் கோமதி சிவலிங்கம் தலைமை தாங்கி தென்னங்கன்றுகள் வழங்கினார். துணைத் தலைவர் கங்கா பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் ஸ்ரீமதி ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் ஜோதி தமிழ்ச்செல்வம், செல்வி குமார், ரோட்டரி கிளப் தலைவர் ராதாகிருஷ்ணன், செயலர் செல்வக்குமார், பொருளாளர் ஜெகதீசன், ரவி உட்பட பலர் பங்கேற்றனர்.ஊராட்சி உதவியாளர் ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**ஆஸி., பிளம்ஸ் கிலோ ரூ.300**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,02:14 IST

மதுரை:மதுரையில் திராட்சை சீசன் களைகட்டும் நிலையில், ஆஸி., பிளம்ஸ் வரத்து ஆரம்பித்துள்ளது. நேற்று கிலோ 300 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற பழ விலை குறித்து, யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது : நேற்று ஒரு கிலோ காபூல் மாதுளை 200 ரூபாய், சீட்லெஸ் மாதுளை 160, பன்னீர் திராட்சை 50, சோனா திராட்சை 70, மஸ்கட் திராட்சை 90, செவ்வாழை 45, வாஷிங்டன் ஆப்பிள் 140, சீனா ஆப்பிள் 120, ராயல்கலா ஆப்பிள் 160, ஆஸி., ஆரஞ்சு 100, பேரிக்காய் 80, நாக்பூர் ஆரஞ்சு 50, சாத்துக்குடி 40, சப்போட்டா 20, அன்னாசி 30, தர்பூசணி 12, பப்பாளி 20, ஆஸி., கிரேப் 250 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார்.

**பாமாயில் விலை தொடர்ந்து சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,02:15 IST

மதுரை:சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை குறைவால், மதுரையிலும் விலை குறைந்து வருகிறது. இதில், பாமாயில் விலை தொடர்ந்து இறங்குமுகமாக உள்ளது.
எண்ணெய் வியாபாரிகள் சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : கடந்த வாரம் 58 ரூபாய்க்கு விற்ற ஒரு லிட்டர் பாமாயில் நேற்று 57 ரூபாய்க்கும், தேங்காய் எண்ணெய் 110 ரூபாயில் இருந்து 105 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. கடலை எண்ணெய் 74 ரூபாயில் இருந்து 73 ரூபாய்க்கும், சூரியகாந்தி எண்ணெய் 73 ரூபாயில் இருந்து 72 ரூபாய்க்கும், வனஸ்பதி 60 ரூபாயில் இருந்து 59 ரூபாய்க்கும், ரைஸ்பிரான் ஆயில் 60 ரூபாயில் இருந்து 58 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. நல்லெண்ணெய் 115 ரூபாய், தும்பை நல்லெண்ணெய் 127 ரூபாய் என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**விவசாயத்திற்கு சலுகைகள் அறிவித்தால் ஆதரவு அரசியல்கட்சிகளுக்கு விவசாயிகள் "நிபந்தனை'**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,01:37 IST

திருநெல்வேலி : கர்நாடகா போல தமிழகத்திலும் விவசாயத்துறைக்கு தனி பட்ஜெட் வெளியிடுவது குறித்து தேர்தல் அறிக்கையில் அரசியல்கட்சிகள் உறுதியளிக்க வேண்டும் என விவசாயிகள் சங்க ஆலோசனைக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.நெல்லை, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் சங்க நிர்வாகிகள் நெல்லையில் சட்டசபைத்தேர்தல் குறித்து ஆலோசனை

மேற்கொண்டனர். பாரத விவசாயிகள் மன்ற அகில இந்திய கவுன்சில் உறுப்பினர் வெங்கட குருநாதன் தலைமை வகித்தார். செயலாளர் கணபதிராமன் முன்னிலை வகித்தார். விவசாயிகள் சங்க நிர்வாகிகள் அய்யலுசாமி, வேல்ராஜ், சங்கரநாராயணன், சங்கர், சுப்பாராமன், விஜயபாண்டியன், செல்வகிருஷ்ணன், ரங்கநாதன், குமரகுருபரன், முருகன், சிங்காரவேல் உட்பட பலர் பேசினர்.
தொழிலாளிகளுக்கு வேலையின்றி ஊதியம் அளித்து சோம்பேறியாக்கி வரும் மத்திய அரசின் 100 நாள் வேலை வழங்கும் ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தால் கிராமங்களில் விவசாயம் நலிவடைந்துள்ளது, விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை, கேரளா, புதுச்சேரியை போல ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தின் முழுப்பயனும் விவசாயிகளுக்கு கிடைக்கச்செய்ய வேண்டும். இதன் மூலம் வேலைவாய்ப்பு பெருகும். விவசாய உற்பத்தி அதிகரிக்கும். நிலங்கள் தரிசாகும் நிலை மாறும்.ஒரு கிலோ ஒரு ரூபாய்க்கு ரேஷன் அரிசி வழங்குவது போல ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ புண்ணாக்கு, தவிடு, மாட்டுத்தீவனத்தை ரேஷன் கடைகள் மூலம் வழங்க வேண்டும். வெளிநாடுகளை போல கால்நடை வளர்ப்பவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க வேண்டும். கர்நாடகா போல தமிழகத்திலும் விவசாயத்துறைக்கு தனி பட்ஜெட் வெளியிட வேண்டும். காய்கறிகளுக்கு குளிர்பதனக்கிடங்கு அமைத்துத்தர வேண்டும். விவசாய விளைபொருட்களுக்கு சேமிப்புக்கிடங்கு பொருள் ஈட்டின் பேரில் கடன் வழங்க வேண்டும். அதிக விளைச்சல் ஏற்பட்டால் விவசாயிகளிடம் விளைபொருட்களை அரசு கொள்முதல் செய்து நஷ்டம் ஏற்படுவதை தடுக்க வேண்டும். இதுதொடர்பாக தேர்தல் அறிக்கைகளில் அரசியல்கட்சிகள் உறுதியளிக்க வேண்டும். உறுதியளிக்கும் கட்சிகளுக்கு தேர்தலில் ஆதரவு அளிக்கப்படும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**ராஜராஜன் நெல் சாகுபடி திடலில் அதிகாரி ஆய்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,01:35 IST

பாவூர்சத்திரம் : கீழப்பாவூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி திடலை வேளாண் விஞ்ஞானி ஆய்வு செய்தார்.கீழப்பாவூர், சுரண்டை கிராமங்களில் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி தொகுப்பு திடலை அம்பை., நெல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுந்தரம் ஆய்வு செய்தார். தொடர்ந்து விவசாயகளுடன் அவர் கலந்துரையாடினார். அத்தியூத்து, கழுநீர்குளம், வீ.கே.புதூர் ஆகிய கிராமங்களில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் ஆத்மா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ராஜராஜன் 1000 சாகுபடிசெயல் விளக்க திடல்களை பார்வையிட்டார்.ஆய்வின் போது பாவூர்சத்திரம் வேளாண்மை உதவி இயக்குனர்

செந்தில்முருகன், ஆத்மா வட்டார தலைவர் ராஜு மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆய்வுக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் கருணாகரன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**விளை பொருட்களின் விலையை விவசாயிகள் நிர்ணயிக்கும் காலம் வரும்: பயிற்சி முகாமில் தெளிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2011,23:09 IST

ஊட்டி : "எதிர் காலத்தில் விளை பொருட்களின் விலையை, விவசாயிகளே நிர்ணயக்கும் நிலை உருவாகும்,' என தோட்டக்கலை தொழில் நுட்ப பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது.மண் மற்றும் நீர் வளங்களை பாதுகாக்க தோட்டக்கலை தொழில் நுட்பங்கள் குறித்த விவசாயிகளுக்கான 5 நாள் பயிற்சி முகாம் ஊட்டியில் நேற்று துவங்கியது.தோட்டக்கலை வளாகத்தில் நடந்த பயிற்சி முகாம் துவக்க விழாவுக்கு மத்திய நீர் மற்றும் மண் வள ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் கோலா முன்னிலை வகித்தார்.தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தொலை தூர கல்வி இயக்குனர் வள்ளுவபாரிதாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது; உலகிலேயே உன்னதமான தொழில் விவசாயமாகும். மனித வாழ்வுக்கு உணவு இன்றியமையாததாகும். உணவு இல்லாமல் மனிதர்களால் உயிர் வாழ முடியாது. ஏழை என்றாலும், செல்வந்தர் என்றாலும் உணவு உட்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். அப்படிப்பட்ட உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் பணி மேன்மையானது. விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க இத்தகைய பயிற்சிகள் வழங்கப்படுகிறது. விவசாயத்தில் கடைப்பிடிக்கப்படும் முறைகளை சரியாகவும், திட்டமிட்டு பயன்படுத்தினால் தோல்வி ஏற்பட வாய்ப்பில்லை. விவசாயத்துக்கான முக்கியதுவம் கிடைக்கும். அப்போது விளை பொருட்களின் விலையை விவசாயிகளே நிர்ணயிக்கும் நிலை உருவாகும்.தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் விவசாயிகள் பயனடைய புதிய இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்த இணையதளத்தில் விதை விதைத்தல் முதல் அறுவடை செய்வது வரையிலான அனைத்து தகவல்களும் இடம் பெறும். இரண்டு லட்சம் "வெப்' பக்கங்கள் கொண்ட தகவல்கள் இதில் அடங்கும். மேலும் விவசாயிகள் எளிதில் புரிந்துக்கொள்ள ஒலி, ஒளி அமைப்பில் இந்த இணையதளம் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வள்ளுவ பாரிதாசன் பேசினார். விழாவில், தோட்டக்கலை இணை இயக்குனர் ஆல்துரை, உதவி இயக்குனர் ஜெகதீஸ்குமார்,

மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மைய முதுநிலை விஞ்ஞானி மணி வண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி

## *ஏப்ரல் – ஜனவரி மாத காலத்தில் மஞ்சள் ஏற்றுமதி 13% சரிவு*



*பி கே கிருஷ்ணகுமார்*

*கொச்சி*

*நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான பத்து மாதங்களில் நாட்டின் மஞ்சள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 13 சதவீதம் குறைந்து 38,000 டன்னாக சரிவடைந்துள்ளது.*

*ரூபாய் மதிப்பில்...*

*எனினும் இதே காலத்தில் ரூபாய் மதிப்பு அடிப்படையில் மஞ்சள் ஏற்றுமதி 74 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.551 கோடியாக அதிகரித்துள்ளது. வளைகுடா நாடுகளில் தேவைப்பாடு உயர்ந்ததாலும், சர்வதேச சந்தையில் மஞ்சள் விலை உயர்ந்துள்ளதாலும் ஏற்றுமதி வருவாய் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.*

*நம் நாட்டில் ஆந்திர மாநிலம் நிஜாமாபாத், தமிழகத்தின் ஈரோடு ஆகிய இடங்கள் பிரதான மஞ்சள் வர்த்தக மையங்களாகும். மகாசிவராத்திரி விடுமுறைக்குப் பின்னர் இந்த சந்தைகளுக்கு மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளது. திங்கள்கிழமை அன்று நிஜாமாபாத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் விலை ரூ.11,700 என்ற அளவில் உள்ளது. ஈரோட்டில் இது ரூ.11,200 என்ற அளவில் உள்ளது.*

*சென்ற ஆண்டின் இதே காலத்தில் நம் நாட்டில் ஒரு குவிண்டால் மஞ்சள் விலை*

ரூ.16,000 என்ற அளவை எட்டியிருந்தது. இந்நிலையில் மேலும் அதிக விலையை எதிர்பார்த்து பெருமளவு மஞ்சளை விவசாயிகள் இருப்பு வைத்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. முக்கிய சந்தைகளுக்கு இதுவரை 40,000 மூட்டை மஞ்சள் (ஒரு மூட்டை சுமார் 75 கிலோ) வந்துள்ள நிலையில், விவசாயிகளிடம் கையிருப்பு ஒரு லட்சம் மூட்டைகள் உள்ளதாக தெரிகிறது.

உற்பத்தி மதிப்பீடு

நடப்பு 2010–11 பருவத்தில் நம் நாட்டில் 69 லட்சம் மூட்டை மஞ்சள் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தைக் காட்டிலும் 44 சதவீதம் அதிகமாக இருக்கும். உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டாலும், தற்போது வெளிநாடுகளில் இருந்து அதிக ஆர்டர்கள் வந்து கொண்டிருப்பதாலும் மஞ்சள் ஏற்றுமதியில் இனி விறுவிறுப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற நிதி ஆண்டில் நாட்டின் மஞ்சள் ஏற்றுமதி 50,750 டன்னாக இருந்தது. சர்வதேச சந்தையில் நல்ல விலை கிடைப்பதாலும், தேவைப்பாடு அதிகரித்து வருவதாலும் நடப்பு நிதி ஆண்டிலும் ஏற்றுமதி இந்த அளவை எட்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

## வடகிழக்கு மாநிலங்களில் புதிதாக ரப்பர் தோட்டங்களை உருவாக்க ரூ.170 கோடி முதலீடு



பிகாஷ் சிங்

கவுஹாத்தி

இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில், நடப்பு பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012), புதிதாக ரப்பர் தோட்டங்களை உருவாக்கும் வகையில் ரூ.170

கோடி முதலீடு செய்ய ரப்பர் வாரியம் திட்டமிட்டுள்ளது.

கேரளா

நம் நாட்டில் தற்போது கேரளாவில்தான் ரப்பர் தோட்டங்கள் அதிகமாக உள்ளன. தமிழ்நாட்டிலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு ரப்பர் மரங்கள் உள்ளன. பாரம்பரிய உற்பத்தி மையமான கேரளாவிலும், தமிழ்நாட்டிலும் ரப்பர் உற்பத்தி நிலவரம் திருப்திகரமாக இல்லை. எனவே இனி வரும் காலங்களில் ரப்பர் தேவையை ஈடு செய்ய வேண்டுமானால் உள்நாட்டில் புதிதாக பல ரப்பர் தோட்டங்களை உருவாக்க வேண்டியது அவசியம்.

கேரளாவிற்கு அடுத்தபடியாக நம் நாட்டில் ரப்பர் பயிருக்கேற்ற சாதகமான சூழ்நிலை வடகிழக்கு மாநிலங்களில்தான் உள்ளது. கேரளாவிற்கு அடுத்தபடியாக திரிபுரா மாநிலத்தில் அதிக அளவில் ரப்பர் மரங்கள் உள்ளன. நாட்டிலுள்ள ரப்பர் தோட்டங்களில் 14 சதவீதம் வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள ஏழு மாநிலங்களில்தான் உள்ளன. இந்த மாநிலங்கள் ஒட்டுமொத்த அளவில் 38,600 டன் ரப்பரை உற்பத்தி செய்கின்றன.

இந்நிலையில் இந்த மாநிலங்களில் புதிதாக ரப்பர் தோட்டங்களை அமைக்கும் வகையில் 4.50 லட்சம் ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் சுமார் ஒரு லட்சம் ஹெக்டேர் நிலத்தில் ஏற்கனவே ரப்பர் மரக்கன்றுகள் நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. அசாம் மாநிலத்தில் மட்டும் ரப்பர் சாகுபடிக்கு ஏற்ற வகையில் இரண்டு லட்சம் ஹெக்டேர் நிலம் உள்ளது. 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், மேலும் 60,000 ஹெக்டேர் நிலத்தில் ரப்பர் மரங்களை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

சலுகைகள்

வட கிழக்கு மாநிலங்களில், 1980–களின் இடைப்பகுதியில் இருந்து ரப்பர் மர சாகுபடி ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. மானியங்கள், ஊக்கத் தொகைகள் போன்ற பல்வேறு சலுகைகள் ரப்பர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களால் நாட்டின் வடகிழக்குப் பகுதி அடுத்த பத்து ஆண்டுகளில் ரப்பர் உற்பத்தி மையமாக உருவெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.